தியாகி சங்கரலிங்கனாரின் தியாகம் என்றும் நமக்கு வழிகாட்டட்டும்

முதல்வர் விஜய் பதிவு

சென்னை, அக்.14: தியாகி சங்கரலிங்கனார் கொண்ட உறுதியும், அவரின் தியாகமும் என்றும் நமக்கு வழிகாட்டட்டும் என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் விஜய் தனது சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:

நமது மாநிலத்திற்கு \\”தமிழ்நாடு\\” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை முதன்மைக் கோரிக்கையாக முன்வைத்து, அறவழியில் 76 நாட்கள் உறுதியான உண்ணாநோன்பிருந்து தன் இன்னுயிரை தியாகம் செய்த ஒப்பற்ற தியாகி சங்கரலிங்கனாரின் நினைவு நாளில் அவருக்கு எனது வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

தனது கொள்கையிலும், தமிழ் மண்ணின் தன்னாட்சிப் பெருமையிலும் எள்ளளவும் விட்டுக்கொடுக்காமல், உயிரைவிட தமிழினத்தின் அடையாளமே பெரிது என நிரூபித்த அவரது இணையற்ற உயிர்த்தியாகம் தமிழக மற்றும் இந்திய வரலாற்றுப் பக்கங்களில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ்நாட்டின் தனித்துவத்தையும், தமிழர் உரிமையையும் காக்க தியாகி சங்கரலிங்கனார் கொண்ட உறுதியும், அவரின் தியாகமும் என்றும் நமக்கு வழிகாட்டட்டும்.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

அதிமுக எம்எல்ஏக்கள் 4 பேருக்கு எதிரான

தகுதி நீக்க நடவடிக்கையை 2 மாதங்களில் முடிக்க வேண்டும்

சபாநாயகருக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, அக். 14: அதிமுக எம்எல்ஏக்கள் ஆறு பேரின் ராஜிநாமா கடிதங்களை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை உறுதி செய்த உயர்நீதிமன்றம், எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கருக்கு எதிராக தகுதிநீக்க நடவடிக்கை எடுக்கக் கோரிய மனுக்களை தள்ளுபடி செய்தும், மீதமுள்ள நான்கு எமஎல்ஏக்களுக்கு எதிரான தகுதிநீக்க நடவடிக்கையை சபாநாயகர் 2 மாதங்களில் முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் தவெக அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் கொறடா உத்தரவை மீறி வாக்களித்ததற்காக அதிமுக எம்.எல்.ஏ.க்கள் மதுராந்தகம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்தியபாமா, அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, பெருந்துறை ஜெயக்குமார், கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை சி.விஜயபாஸ்கர் ஆகிய 6 பேருக்கு எதிராக தகுதிநீக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிமுக கொறடா பேரவைத் தலைவரிடம் கடிதம் கொடுத்தார். அதன் மீதான நடவடிக்கை நிலுவையில் உள்ளது. இந்நிலையில், மரகதம் குமாரவேல் உள்ளிட்ட 6 பேரும் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர்.

இதையடுத்து, அவர்களின் ராஜினாமாவை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரி, அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தேசிய மக்கள் சக்தி கட்சி தலைவர் எம்.எல்.ரவி உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு விசாரித்து தீர்ப்பை தள்ளிவைத்தது.

இந்த வழக்குகளில் நீதிபதிகள் நேற்று தீர்ப்பளித்தனர். அதில், எந்த காரணங்களுக்காகவும் ஒரு எம்எல்ஏ தனது பதவியை ராஜினாமா செய்யலாம். அது தனிப்பட்ட உரிமை. அந்த ராஜினாமாவின் நோக்கம் குறித்து விசாரணை நடத்த கூறும் சட்டத்தில் உண்மையாக, சுய விருப்பத்தின் படி, ராஜினாமா செய்தது குறித்து எந்த விளக்கங்களும் அளிக்கப்படவில்லை.

ஆனால், அந்த ராஜினாமாவின் பின்னணியில் இருக்கக்கூடிய நோக்கம் குறித்து சபாநாயகர் ஆய்வு செய்ய முடியாது. மாறாக சம்பந்தப்பட்ட எம்எல்ஏ நேரில் ராஜினாமா கடிதம் அளித்தாரா, சுய விருப்பத்தின்படி அளித்தாரா என்பதைத்தான் விசாரிக்க முடியும்.

ராஜினாமாவின் பின்னணியில் உள்ள உள்நோக்கம் குறித்து சபாநாயகர் விசாரணை நடத்த முடியாது என்பதால், ராஜினாமாக்களை சபாநாயகர் ஏற்றுக்கொண்டது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று கருத முடியாது.

தகுதி நீக்க நடவடிக்கையைப் பொறுத்தவரை, எம்.ஆர். விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கருக்கு எதிரான புகாரை அதிமுக திரும்பப் பெற்றுள்ளதால் அவர்களுக்கு எதிரான தகுதிநீக்க நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை. மீதமுள்ள 4 எம்எல்ஏக்கள் மீதான தகுதிநீக்க நடவடிக்கை சபாநாயகர் முன் நிலுவையில் உள்ளது.

நான்கு எம்எல்ஏக்களின் ராஜினாமாவின் பின்னணியில் குதிரைபேரம் நடந்துள்ளதாக மனுதாரர் கூறும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டாலும்கூட, தகுதிநீக்க நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் ராஜினாமாவை ஏற்கக் கூடாது என்று கூற முடியாது.

இரண்டுமே தனித்தனி நடவடிக்கைகள். சபாநாயகர் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டதை அரசியல் சாசன விதிமீறலாகவோ, மோசடியாகவோ கருத முடியாது. ராஜினாமாவை ஏற்பதற்கு தகுதிநீக்க நடவடிக்கை தடையாக இருக்காது. ராஜினாமாவை ஏற்றுக் கொண்டதன் காரணமாக தகுதிநீக்க நடவடிக்கை செல்லாததாகிவிடும் என்றும் கூற முடியாது.

தகுதிநீக்க நடவடிக்கை தொடர்பாக நான்கு எம்எல்ஏக்களுக்கு நோட்டீஸ் அனுப்பி 4 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், அதற்கு எந்தவிதமான திருப்திகரமான விளக்கங்களும் அளிக்கப்படவில்லை. எனவே, தகுதிநீக்க நடவடிக்கையை விரைந்து முடிக்க வேண்டும் என்று சபாநாயகருக்கு உத்தரவிடுவது, அவரது அதிகாரத்தில் தலையிடுவதைப் போன்றது அல்ல.

எனவே, இந்த தகுதிநீக்க நடவடிக்கையை விரைந்து விசாரணைக்கு எடுத்து இரண்டு மாதங்களில் முடிவெடுக்க வேண்டும். இந்த விசாரணையை எந்த எம்எல்ஏவும் தாமதப்படுத்துவதற்கு சபாநாயகர் அனுமதிக்கக் கூடாது.

இரண்டு மாதங்களுக்குள் தகுதிநீக்க நடவடிக்கையில் முடிவெடுக்காதபட்சத்தில், சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தை அணுகலாம். ராஜினாமாவை ஏற்றத சபாநாயகர் முடிவு அரசியல் சாசனத்தின்படி செல்லுபடியானது. அதனடிப்படையில், எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் சி.விஜயபாஸ்கர் ஆகியோரின் ராஜினாமாவை ஏற்று சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. மரகதம் குமரவேல், சத்தியபாமா, ஜெயக்குமார் மற்றும் இசக்கி சுப்பையா ஆகியோருக்கு எதிரான தகுதிநீக்க நடவடிக்கையை இரண்டு மாதங்களில் முடிவெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இடைத்தேர்தல் பிரசாரத்தில் திமுக நிர்வாகி மரணம்

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வீட்டிற்கு சென்று நேரில் அஞ்சலி

▶ மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது, திமுக ஆதிதிராவிடர் நலக் குழுவின் சென்னை கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் குமரவேல் உறவினர் வீட்டுக்கு சென்றபோது மாரடைப்பினால் உயிரிழந்தார். சென்னையில் உள்ள குமரவேல் இல்லத்துக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று நேரில் சென்று, அவரது படத்துக்கு மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

சென்னை, அக்.14: இடைத்தேர்தல் பிரசாரத்தின் போது இறந்த திமுக நிர்வாகியின் வீட்டிற்கு நேரில் சென்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆர்.குமரவேல் கடந்த 27ம் தேதி மதுராந்தகம் இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் பரந்தாமனுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்ட போது மாரடைப்பால் உயிரிழந்தார்.

இந்நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் புளியந்தோப்பில் உள்ள குமரவேல் வீட்டிற்கு நேற்று நேரில் சென்று அவரது உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வில், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், கே.எஸ். ரவிச்சந்திரன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா உடனிருந்தனர்.

தொடர்ந்து, திமுக சட்டத்துறை இணைசெயலாளர் பரந்தாமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

2026 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி கட்சிகளின் வாக்குகள் திமுக கூட்டணிக்கு ஒன்றிணையாமல் இருந்ததற்கு பல காரணங்கள் உள்ளது. 2021 தேர்தலில் ஒன்று சேர்ந்த கூட்டணி கட்சிகளின் வாக்குகள் 2026 தேர்தலில் ஏன் அப்படி ஆகவில்லை என்பது மக்களுக்கு தான் தெரியும். கூட்டணிக் கட்சிகளின் உதவி இல்லாமலேயே இடைத்தேர்தலில் திமுக இவ்வளவு வாக்குகளை பெற்றிருக்கிறது என்றால் திமுக தேவை மக்களுக்கு உள்ளது என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். பல்வேறு அரசியல் கட்சிகள் பல சின்னங்களில் தேர்தலை எதிர்கொண்டாலும் பிரதான திமுகவிற்கு மக்கள் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

தவெக அரசு போன்ற ஒரு நயவஞ்சக அரசு இந்தியாவில் எங்கேயும் கிடையாது. இது பாஜவின் மற்றொரு உருவம். எப்படி தேசிய அளவில் பாஜவுக்கு எதிரான கருத்துகள் வரும் பொழுது அதை பாஜ ஒடுக்குகிறதோ, அதேபோன்ற வேலையை தான் மாநில அளவில் தமிழக வெற்றிக் கழகம் செய்து வருகிறது.

கொடுங்கையூர் பகுதியில் இரண்டு ஒப்பந்த தொழிலாளர்கள் விஷவாயு தாக்கி உயிரிழந்த நிலையில் இந்த சம்பவம் பல முன்னணி ஊடகங்களில் வரவில்லை. இந்த சம்பவத்தை சென்னையை சேர்ந்த அமைச்சர்கள் ஏன் நேரில் சென்று பார்க்கவில்லை. இது தொடர்பாக அரசு அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் மவுனம் சாதிக்கின்றனர். தவெக அரசுக்கு மக்களின் உயிர் மீது எந்த அக்கறையும் இல்லை, மக்களை துச்சமாக நினைக்கின்றனர்.

தொடர்ந்து, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடும் மக்கள் ஆசையாக தவெகவிற்கு வாக்களித்து தற்போது அவதிப்பட்டு வருகின்றனர். இதே எண்ணத்தோடு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உங்கள் விஜய், உங்கள் விஜய் என்று கூறிய மாணவர்கள், இளைஞர்களை கொடூரமாகதாக்கியது விஜய்யிடம் உள்ள காவல்துறை தான். இதிலே, அவரது இரட்டை வேடம் தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஒன்றிய அமைச்சரிடம் நேரில் கோரிக்கை



▶ டெல்லியில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, தலைமை செயலாளர் ராஜ்குமார் நேரில் சந்தித்து, யுபிஐ பண பரிவர்த்தனையில் கட்டண விதிப்பை திரும்ப பெற வேண்டும், ஈரடுக்கு ஜிஎஸ்டி வரியை ஒரே வரியாக அறிவிக்க வேண்டும், ஜிஎஸ்டி வரி சட்டங்களில் உள்ள வணிகர்களுக்கு எதிரான சட்டப்பிரிவுகளை தளர்த்த வேண்டும் என கோரிக்கைகள் மனு அளித்தனர்.

தமிழக ஆளுநராக அர்லேகர் நியமனம்

முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை, அக்.14: தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி செயல்பட்டுவந்தார். கடந்த மார்ச் மாதம் அவர் மேற்குவங்க ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதை தொடர்ந்து கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் கடந்த 6 மாதங்களாக அர்லேகர் செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில், கேரள ஆளுநர் பொறுப்பில் இருந்து ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் விடுவிக்கப்பட்டு, தமிழ்நாடு ஆளுநராக நியமித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவிட்டார்.

கோவாவை சேர்ந்த இவர் 1989ல் பாஜவில் இணைந்தார். 2002 முதல் 2007 வரை கோவா சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார். 2003 முதல் 2007 வரை கோவா மாநில பாஜ தலைவர். 2012 முதல் 2017 வரை கோவா சபாநாயகராக பதவி வகித்துள்ளார். இமாச்சல பிரதேசம், பீகார் ஆளுநராகவும் பதவி வகித்தவர்.

கடந்த ஆண்டு கேரள மாநிலத்தின் 23வது ஆளுநராக பதவியேற்றார்.

தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அர்லேகருக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்து வெளியிட்ட பதிவில், “தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு மனமார்ந்த வாழ்த்துகள். தமிழ்நாட்டின் வளர்ச்சி, மாநில உரிமைகள் மற்றும் தமிழக மக்களின் நலன் காக்கும் வகையில் தங்களின் பணி சிறக்க வாழ்த்துகள்” என தெரிவித்துள்ளார்.

செம்மண் முறைகேடு புகார் தொடர்பாக

பொன்முடி மீது அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கு ரத்து

உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, அக்.14: கடந்த 2006-11ம் ஆண்டு திமுக ஆட்சியில் உயர்கல்வி மற்றும் கனிம வளங்கள், சுரங்கத்துறை அமைச்சராக க.பொன்முடி பதவி வகித்தபோது, விழுப்புரம் மாவட்டத்தில் செம்மண் வெட்டி எடுத்ததன் மூலம் அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 இழப்பு ஏற்படுத்தியதாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்திருந்தது.

பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி, உறவினர் ராஜமகேந்திரன் உள்ளிட்டோர் மீதான வழக்கை விசாரித்த விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்து கடந்த ஏப்ரலில் தீர்ப்பளித்தது.

முன்னதாக, செம்மண் முறைகேடு தொடர்பாக கிடைத்த பெருந்தொகை ஹவாலா பரிவர்த்தனை மூலம் வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளதாகக் கூறி அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோருக்கு எதிராக சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்திருந்தது.

இந்த வழக்கில் 2023ம் ஆண்டு சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோர் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களில், மூல வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதால், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கை தொடர்ந்து விசாரிக்க முடியாது. எனவே, அமலாக்கத்துறை வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கூறப்பட்டிருந்தது. வழக்கை விசாரித்த, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, உச்ச நீதிமன்ற உத்தரவின் படி மூல வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பொன்முடி உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் அமலாக்கத்துறை வழக்கை தொடர அனுமதிக்க முடியாது எனக்கூறி வழக்கை ரத்து செய்தனர்.

குரூப் 1 முதல்நிலை தேர்வில் கேட்கப்பட்டிருந்த

200 வினாக்களில் 32 வினாக்கள் தவறு

தேர்வர்கள் கருத்து

சென்னை, அக்.14: துணை கலெக்டர், உதவி ஆணையர் (வணிக வரிகள்), கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், மாவட்ட பதிவாளர், ஒரு உதவி தொழிலாளர் ஆணையர் உள்பட குரூப்-1 பதவிகளில் வரும் 46 பணியிடங்களுக்கான முதல்நிலைத் தேர்வு செப்,27ல் நடந்தது.

உத்தேச விடைக்குறிப்பு கடந்த 7ம் தேதி வெளியானது. உத்தேச விடைகளுக்கான மறுப்புகள், கருத்துகளை www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் சென்று தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்வர்கள் பலரும் தங்களுடைய கருத்துகளை தெரிவித்துள்ளனர். 200 வினாக்களில் 32 வினாக்களில் தவறுகள் இருப்பதாக தேர்வர்கள் கருத்து தெரிவித்திருப்பதாக சமூகவலைதளங்களில் தகவல்கள் பரவி வருகின்றன.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (GRIHUM HOUSING FINANCE)

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: ஸ்ரீராம் டவர்ஸ், எண். 2717, காக்களூர் பைபாஸ் சாலை, காக்களூர், திருவள்ளூர்- 602 001

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 30.10.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண் HL00609100000005013213 சதிஷ் ஷியாமளா (கடன்தாரர்), சுசி சதிஷ் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 10.05.2025 05.10.2025 தேதியின்படி ரூ. 34,55,326/- (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து முந்நூற்று இருபத்து ஆறு மட்டும்) மற்றும் அதனுடன் தொகை முழுமையாக வசூலிக்கப்படும் வரை ஆண்டுக்கு 15.6% என்ற விகிதத்தில் வட்டியும் செலுத்தப்பட வேண்டும்.	நேரடி	காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம், பம்மல் கிராமம், ஈஸ்வரன் நகர், 8-வது தெரு, "நட்சத்திரா ஃபிளாட்ஸ்", இரண்டாவது தளம், பிளாட் எண். S-1 இன் மொத்தக் கட்டுமானப் பரப்பு பொதுப் பகுதிகள் உட்பட 765 சதுர அடி ஆகும். மற்றும் அதனுடன் இணைந்த பிரிக்கப்படாத நில உரிமைப் பங்கு ஆகியவற்றுடன் கூடிய நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. இந்த சொத்து, பழைய S.No.எண் 105/3, பட்டாவின்படி புதிய S.No.105/86, மனை எண்.19 இல் உள்ள 3600 சதுர அடி நிலப்பரப்பில் 300 சதுர அடி பிரிக்கப்படாத நில உரிமைப் பங்கினைக் கொண்டதாகவும் உள்ளது. இதன் எல்லைகள் வருமாறு: வடக்கு: 25 அடி அகலமுள்ள சாலை; தெற்கு: மனை எண். 6; கிழக்கு: மனை எண். 20; மேற்கு: மனை எண். 18.	Rs. 2249100.00/- (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து நாற்பத்தொன்பது ஆயிரத்து நூறு மட்டும்)	Rs. 224910.00/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்து நான்காயிரத்து தொளாயிரத்து பத்து மட்டும்)	29-10-2026 Before 5 PM	10,000/-	23-10-2026 (11AM – 4PM)	30-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் 29–10–2026 குறிப்பிடப்பட்ட தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிளை முகவரி : ஸ்ரீராம் டவர்ஸ், எண். 2717,காக்களூர் பைபாஸ் சாலை, காக்களூர், திருவள்ளூர்– 602 001 கைபேசி எண். +91 8281138143, +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 14-10-2026
இடம்: தமிழ்நாடு

ஓம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

HDFC BANK We understand your world

ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்
கிளை: முதல் தளம், ஐ.டி.சி சென்டர், எண்.760, அண்ணாசாலை, சென்னை 600002.
CIN L65920MH1994PLC080618 Website : www.hdfcbank.com.

கேட்புத் தொகை அறிவிப்பு

2002 ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (2) மற்றும் 2002ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3 (1) ன் கீழ் விடுக்கப்படுவது.மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி எண் 3ன் கீழ் **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT- மும்பையால் 17.03.2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்-டி-எஃப்சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக ஆதரைஸ்டு ஆபீசர் நியமிக்கப்பட்ட கீழே கையொப்பமிட்டுள்ளவர், தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) சட்டத்தின் பிரிவு 13 (2) ன் கீழ் கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் அவரவர் அறிவிப்பில் கண்ட தொகையினை அதன் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார். கீழே கையொப்பமிட்டுள்ளவர் தமக்கு இறுதியாக தெரிந்த கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) ன் வீட்டு முகவரியில் மேற்கூறிய அறிவிப்புகளின் நகல்களை ஒட்ட வகை செய்துள்ளார். மேற்கூரிய அறிவிப்புகளின் உண்மை நகல்கள் அவ்வதிகாரியிடம் உள்ளதால் மேற்சொன்ன கடனாளர்கள் / சட்டப்படியான வாரிசு(கள்) / சட்டப் பிரதிநிதி(கள்) க்கு அவை தேவை இருப்பின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அன்னாரை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறிய நிலையில் இந்த கேட்புத்தொகை அறிவிப்பின் மூலம் மேற்படி கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) தாங்கள் எங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள் மேலும் குறிப்பிட்டுள்ள கடனாளரால் எழுத்து பூர்வமாக உள்ள ஆவணத்தின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதி வரையிலான தொகை மற்றும் ஆண்டொன்றிக்கு இந்த அறிவிக்கை வெளியிட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், ஹெச் டி எஃப் சிக்கு செலுத்த வேண்டுமாறு மீண்டும் ஒரு முறை கோரப்படுகிறார். மேலும், கடனை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக, கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) அவரவர்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்களை கடன் பாதுகாப்பிற்காக **ஹெச் டி எஃப் சி**க்கு அடமானம் செய்துள்ளனர். சட்டத்தின் பிரிவு 13ன் உட்பிரிவு (8)ன் படி அடமானம் பெற்ற சொத்தினை கடனாளர்(கள்) மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வ.எண்.1 : கடனாளர் பெயர்(கள்): Dr தியாகராஜன் கோவிந்தசாமி, பிளாட் எண். 1863 முதல் தளம், TNHB காலனி, கலாம் குளோபல் பள்ளி, சித்தாலப்பாக்கம், காஞ்சிபுரம் 600126. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 11.09.2026, NPA தேதி: 03.08.2026 மொத்த கடன் நிலுவைத் தொகை: 31.07.2026 வரை ரூ. 15,79,736/-**

அசையாச் சொத்து விவரம்: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சேலையூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம் தற்போது சோழிங்கநல்லூர் வட்டம், TNUDP திட்டம், TNHB காலனி, சித்தலப்பாக்கம் கிராமத்தின் சர்வே எண்.5/3 பகுதி, அடங்கிய EWS-A வகை, இன் பழைய எண்.182, புதிய எண்.53 இன் உள்ள மனை எண்.260, இன் விஸ்தீரணம் 32 சதுர மீட்டர் அல்லது 345 சதுர அடி நிலம், வீட்டு மனை சொத்து, அதனுடன் கட்டிடம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள் வடக்கில் மனை எண்.259 EWS-A, தெற்கில் மனை எண்.261 EWS-A, கிழக்கில் ஆரம்ப பள்ளி, மேற்கில் 4.50 மீட்டர் சாலை, நாற்பரப்புகள் வடக்குபுறம் 8.00 மீட்டர், தெற்கில் 8.00 மீட்டர், கிழக்கில் 4.00 மீட்டர், மேற்கில் 4.00 மீட்டர், அனைத்தின் விஸ்தீரணம் 32 சதுர மீட்டர் அல்லது 345 சதுர அடி

வ.எண்.2 : கடனாளர் பெயர்(கள்): திரு. கார்த்திகேயன் A (கடன்தாரர்) திருமதி. ராதிகா கார்த்திகேயன் (இணைக் கடன்தாரர்) இருவரும் வசிக்கும் முகவரி: பழைய எண்-22A புதிய எண்-45-1, எருத்திக்கா தெரு, திருவாரூர் வடக்கு, திருவாரூர் 610002. **திரு. J அன்பழகன், (உள்ளூர் தொடர்பு நபர்)** எண்.29A, கீழ்சன்னதி தெரு, திருவாரூர்-610 002. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 18.09.2026 ; NPA தேதி: 03.08.2026 மொத்த கடன் நிலுவைத் தொகை: 31.07.2026 வரை ரூ. 15,01,296/-**

அசையாச் சொத்து விவரம்: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பம்மல் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, பொழிச்சலூர் கிராமம் நரசிம்மன் நகர் பழைய சர்வே எண். 166/2, மறு சர்வே எண். 166/2B1A2, 02.03.2012 தேதியிட்ட RPT 752/2012ன்படி பட்டா எண். 4261இல் அடங்கிய சென்னை 600074, பொழிச்சலூர், நரசிம்மன் நகர், பழைய கதவு எண்.6/257 புதிய கதவு எண்.12/204, மனை எண். 13 மற்றும் 14 இன் விஸ்தீரணம் 4200 சதுர அடி அல்லது 390 சதுர மீட்டர் நிலம் மேலும் Vok வில்லா என பெயரிடப்பட்ட தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள 2000 சதுர அடி அல்லது 185.8 சதுர மீட்டர் விஸ்தீரணம் கொண்ட கட்டிடம் மேலும் கார் நிறுத்துமிடம் உட்பட அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள் வடக்கில் மனை எண்.12, தெற்கில் மனை எண்.15, கிழக்கில் வெங்கடேஸ்வரா நகர் மற்றும் மேற்கில் 20 அடி சாலை நாற்பரப்புகள் கிழக்கு மேற்காக வடக்குபுறம் 60 அடி, கிழக்கு மேற்காக தென்புறம் 60 அடி, வடக்கு தெற்காக கிழக்குபுறம் 70 அடி, வடக்கு தெற்காக மேற்குபுறம் 70 அடி மொத்த விஸ்தீரணம் 4200 சதுர அடி அல்லது 390 சதுர மீட்டர்.

வ.எண்.3 : கடனாளர் பெயர்(கள்): திரு. பாலாஜி OS [காலமானவர்] (கடன்தாரர்) மனைவி: திருமதி. கீர்த்திகா, மகன்: மாஸ்டர் சாய் வைரோச்சன், மகள்: செல்வி. B சஹஸ்ராரா, தாய்: திருமதி. உமா மகேஸ்வரி TK. அனைவரும் வசிக்கும் முகவரி: எண்.10, புதுத்தெரு, கோட்டூர், சென்னை-600 085. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 25.09.2026 ; NPA தேதி: 05.04.2026 மொத்த கடன் நிலுவைத் தொகை: 31.05.2026 வரை ரூ. 11,29,049/-**

அசையாச் சொத்து விவரம்: தென்சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காட்டங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மண்ணிவாக்கம் பஞ்சாயத்து வாரியத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு வட்டம், மண்ணிவாக்கம் கிராமத்தின் சர்வே எண். 278/1C இல் அடங்கிய ஸ்ரீ சண்முகா நகர் பகுதி II எண்.1, மனை எண்.13, இன் விஸ்தீரணம் 2400 சதுர அடி அல்லது 222.9 சதுர மீட்டர் நிலத்தின் பிரிக்கபடாத பங்கு 337 சதுர அடி அல்லது 31.3 சதுர மீட்டர் நிலம் மேலும் அதில் கட்டப்பட்டுள்ள தரைதளத்தின் 563 சதுர அடி அல்லது 52.3 சதுர மீட்டர் சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் பிளாட்.A அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள் வடக்கில் 24 அடி சாலை, தெற்கில் சர்வே எண். 278/1D இல் உள்ள காலி நிலம், கிழக்கில் சர்வே எண்.278/1C இல் உள்ள கிணற்று பகுதி, மேற்கில் மனை எண்.16 நாற்பரப்புகள் கிழக்கு மேற்காக வடபுறம் 36 அடி, கிழக்கு மேற்காக தென்புறம் 44 அடி, வடக்கு தெற்காக கிழக்குபுறம் 60 அடி, வடக்கு தெற்காக மேற்குபுறம் 60 அடி.

வ.எண்.4 : கடனாளர் பெயர்(கள்): திரு. பிரதீபன் P, பிளாட்-18, தளம்-4. பார்க் அவென்யூ, விஸ்வகர்மா பில்டர்ஸ், புல்ல ரெட்டி அவென்யூ, ஷெனாய் நகர், சென்னை 600 030. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 28.09.2026 ; NPA தேதி: 03.08.2026 மொத்த கடன் நிலுவைத் தொகை: 31.08.2026 வரை ரூ. 62,47,037/-**

அசையாச் சொத்து விவரம்: மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அண்ணா நகர் சார்பதிவு மாவட்டதிற்குட்பட்ட, சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம் (முன்னர் எழும்பூர் நுங்கம்பாக்கம் வட்டம்) அமைந்தகரை கிராமத்தின், எண்.10 புள்ளா அவென்யூ, பழைய சர்வே எண். 51/3, 51/3A, 51/4 & 5 பகுதிகள், நகர சர்வே எண்கள் 48/1, 2 & 3, பிளாக் எண்.2, இல் உள்ள நிலத்தின் பெரிய விஸ்தீரணம் 12485 சதுர அடி அல்லது 1159.89 சதுர மீட்டர் அதில் பிரிக்கபடாத பங்கு 470 சதுர அடி அல்லது 43.6 சதுர மீட்டர் மேலும் அதில் பார்க் அவென்யூ, விஸ்வகர்மா பில்டர்ஸ், நான்காவது தளத்தின் குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் பிளாட் D(18) அதனைச்சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள் வடக்கில் புதிய நகர சர்வே எண். 42/1,2 & 3, தெற்கில் முதல் மேற்கு தெரு, சென்னாய் நகர் மற்றும் புதிய சர்வே எண். 49/1 & 2, பிளாக் 12, கிழக்கில் புள்ளா ரெட்டி அவென்யூ பிளாக் எண்.12, மேற்கில் நகர சர்வே எண்கள். 43 & 47 பகுதிகள் மற்றும் T.S. எண்.48/1,2 & 3 இல் மீதமுள்ள நிலம்.

வ.எண்.5 : கடனாளர் பெயர்(கள்): திரு. தேவேந்திரடு K, பிளாட்-PE-0506, DLF PARC எஸ்டேட், எம்ஆர் ராதா சாலை, சிறுசேரி, புதுப்பாக்கம் கிராமம், சென்னை-603103. **கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி: 03.10.2026 ; NPA தேதி: 03.06.2026 மொத்த கடன் நிலுவைத் தொகை: 31.07.2026 வரை ரூ. 11,34,584/-**

அசையாச் சொத்து விவரம்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தற்போது வண்டலூர் வட்டம், புதுபாக்கம் கிராமத்தின் சர்வே எண். 78/4A பகுதி, 78/3A2 பகுதி இல் அடங்கிய MR ராதா சாலை DLF சதர்ன் டவர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் PARC எஸ்டேட் என்ற திட்டத்தின்கீழ் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினர்க்கு ஒதுக்கப்பட்ட எண். PE-0506 மேலே சொன்ன நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 51.96 ஏக்கர் 2,10,289.81 சதுர மீட்டர் அல்லது 2,263,094.87 சதுர அடி நிலத்தின் 645.840 சதுர அடி அல்லது 60 சதுர மீட்டர் குடியிருப்பு நிலம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.

***திரும்ப செலுத்தும் நாள்/சொத்தினை பணமாக்கும் வரையில் மேற்கால வட்டி மற்றும் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.** மேற்கூறியபடி ஹெச் டி எஃப் சி க்கு திருப்பிச் செலுத்த தவறும் பட்சத்தில் அந்த கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) ன் மீது இச்சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் மற்றும் அதற்குப் பொருத்தமான ஏனைய விதிகளின் அடிப்படையில் ஹெச் டி எஃப் சி மூலம் நடவடிக்கை தொடரப்படுவதோடு அதற்குண்டான செலவுகளுக்கும் விளைவுகளுக்கும் கடனாளர்கள் / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) களே பொறுப்பு. மேற்படி கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை ஹெச் டி எஃப் சி யின் எழுத்து மூல முன்னிசைவு இல்லாமல் கிரையமோ, குத்தகையோ அல்லது வேறு எந்த வகையிலோ உரிமை மாற்றம் செய்ய மேற்படி சட்டம் தடை செய்கிறது. இதை யாதொருவர் மீறினாலோ அல்லது மீறத் தூண்டினாலோ மேற்படி சட்டத்தின்/விதியில் குறிப்பிட்டுள்ளபடி அன்னாருக்கு சிறைத்தண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படும்.

தேதி: 14-10-2026
இடம்: சென்னை

பதிவு அலுவலகம்: HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை 400013

ஒப்பம்/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
HDFC பேங்க் லிமிடெட்